08.09.2025.

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண்.20/2019

அ.சா.22

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மைக்கேல் இருதயராஜ் | | |
| த/பெ | பாப்பையா | | |
| கிராமம் | கஞ்சனூர் | தொழில் | காவல் ஆய்வாளர், திருவெண்ணைநல்லூர் காவல் நிலையம் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 56/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 08.09.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

**நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கஞ்சனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு. ஜோகிந்தர் அவர்கள் இறந்துவிட்ட காரணத்தினால், அவருக்கு பதிலாக கூடுதல் சாட்சியாக என்னை விசாரிக்க, மனு செய்த காலத்தில், திருவெண்ணைய்நல்லூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தேன். அதன் பிறகு மாறுதலாகி கஞ்சனூர் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிகிறேன். எனக்கு திரு.ஜோகிந்தர் அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம் ஆகும். வழக்கு கோப்புகளின் அடிப்படையில் தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27/06/2018 ம் தேதி டி.எடப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த முகமது இப்ராகிம் மகன் சம்சுதீன் என்பவர் நிலையம் ஆஜராகி, தனது சகோதரர் அப்துல் ஜபார் என்பவர் தனது பண்ணை வீட்டில் கொலை செய்து கிடந்தது சம்பந்தமாக எழுத்து மூலமாக கொடுத்த புகாரை உதவி ஆய்வாளர் திரு.பிரகாஷ் அவர்கள் பெற்று நிலைய குற்ற எண் 528/18 இ.த.ச பிரிவு 302 -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அச்சு முதல் தகவல்**

அறிக்கையை நீதிமன்றத்திற்கும், மற்ற பிரதிகளை முறையாக உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, ஒரு பிரதியை ஆய்வாளர் திரு.ஜோகிந்தர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை, அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 27/06/2018 ஆம் தேதி சம்பவ இடமான டி.எடப்பாளையம் ஸ்ரீ சித்தலிங்க மடம் சாலையில் ஓரமாக எடப்பாளையத்தில் இறந்த அப்துல் ஜபாரின் பண்ணை வீட்டை பார்வையிட்டு, அன்று 21.00 மணிக்கு பார்வை மகசர் மற்றும் வரைபடம் ஆகியவற்றை சாட்சிகள் சித்தலிங்கமடம் கிராம நிர்வாக அலுவலர் பொன்.கண்ணதாசன் மற்றும் சித்தலிங்கமடம் கிராம உதவியாளர் தனபால், ஆகியோர் முன்னிலையில் தயார் செய்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் வரைபடம் அவர் தயார் செய்ததுதான். அந்த மாதிரி வரைபடம் (உள் படம் உட்பட எண்ணிக்கை 2) அ.சா.ஆ.17 ஆகும். பின்பு சம்பவ இடத்திலிருந்த ரத்தகறையுடன் கூடிய சிமெண்ட் காரையும், 2 சாதாரண காரையும், அதே சாட்சிகள் முன்னிலையில் 22.00 மணியளவில் கைப்பற்றியுள்ளார். அதிலும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் 22.30 மணி முதல் 00.30 மணி வரை சம்பவ இடத்தில் கொலை செய்யப்பட்டு இறந்து போன அப்துல் ஜபார் என்பவரது பிரேதத்தின் மீது, சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில், பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.18 ஆகும். பின்பு மேற்படி இறந்து போன அப்துல் ஜபார் என்பவரின் பிரேதத்தின் மீது, பிணக்கூறாய்வு செய்ய காவலர் 2271 சக்திவேல் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும் புகார்தாரர் சம்சுதீன், சாட்சிகள் மஜீத், ஜலால், நபி பாஷா, ஜலால் என்கிற கலால், ஜாகீர், ரொக்கையா பி, சபிரா பி, கலீல், ஜாபர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த வழக்கில் காவலர் 2271 சக்திவேல் என்பவர் பிரேத விசாரணை யின் போது, பிரேத கூராய்வு முடித்த பிறகு, இறந்து போன அப்துல் ஜபார் உடலில் இருந்து அணிந்திருந்த வெள்ளை கலர் கோடு போட்ட முழுக்கை சட்டை 1, வெள்ளை கலர் பனியன் 1, பழுப்பு நிற பேண்ட் 1, இறந்து போனவரின் இரு கைகளிலும் இருந்த முடிகள் மற்றும் இறந்து போனவரின் தலையில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரி முடிகள், சம்பவ இடத்திலிருந்து வெவ்வேறு பகுதிகளில் இருந்து எடுக்கப்பட்ட முடிகள், ஆகியவற்றை தனி அறிக்கை மூலமாக ஆய்வாளரிடம் ஆஜர் படுத்தியுள்ளார். அவற்றை கைப்பற்றுதல் மகசர்

மூலம் கைப்பற்றியுள்ளார். அதன் பிறகு அந்த படிவம்-95, மேலும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ரத்தம் படிந்த, மற்றும் சாதாரண சிமெண்ட் காரைகளையும் சேர்த்து படிவம் 95 மூலம் ( 8 அயிட்டங்கள், 2 படிவம்-95 கள்) மூலம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தப் படிவம் 95(எண்ணிக்கை 2) அ.சா.ஆ.19 ஆகும். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து இறந்து போன அப்துல் ஜபார் என்பவரை யாரோ முன்விரோதம் காரணமாக கொலை செய்திருக்கலாம் என்று தெரியவந்ததால், ஊரில் மற்ற நபர்களை விசாரித்து, தக்க புலன் வைத்து எதிரிகளை சந்தேகத்தின் பேரில் தேடி வந்துள்ளார். கடந்த 30/06/2018 ஆம் தேதியன்று மேலும் கொலையுண்டு இறந்து போன ஜாபர் என்பவரது நிலத்தில் உள்ள சம்பவ இடத்தினை மீண்டும் தணிக்கை செய்தபோது, அன்று காலை 8 மணிக்கு சம்பவ இடத்தில் கரும்பு தோட்டத்தில், 10 சைஸ் அளவுள்ள வி.கே.சி பிரைட் என்ற எழுத்துள்ள பிரவுன் கலர் செருப்பு கிடந்ததை, சாட்சிகள் பொன்.கண்ணதாசன் மற்றும் தனபால் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.12 ஆக அ.சா.16 மூலம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 20/07/2018 ஆம் தேதி மேலும் புகார்தாரர் சம்சுதீன் என்பவரை மீண்டும் விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்த போது, டி.எடப்பாளையம் கிராமத்தை சேர்ந்த மோகன் மற்றும் அவரது தம்பி ரவி, ஆகியோர் மீது சந்தேகம் உள்ளதாக மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதில் விரோதம் உள்ளதாக சாட்சிகள் விசாரணையில், தெரியவந்துள்ளது. மேலும் சாட்சிகள் நசீர் பாஷா, கண்ணன், குப்புசாமி, பாவாடை த/பெ.கட்டையன், முகமது ஷெரிப், அம்பிகா, கௌதம், முருகன், பாவாடை த/பெ.சின்ன குள்ளான், ராமலிங்கம், வீரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகளின் விசாரணையில் இருந்தும், ஆய்வாளரின் இரகசிய விசாரணையில் இருந்தும் மோகன், முஸ்தபா, ஆகியோரின் மீது அதிகப்படியான சந்தேகம் உள்ளதாக ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

**(**மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை பகுதியாக நிறுத்தி வைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது**).**